


செய்திகள் அரசியல் பொது சம்பவம் கோர்ட் உலகம் தமிழகம் மாவட்டம் விளையாட்டு வர்த்தகம் சினிமா இதப்படிங்க முதல்ல இ-ஆன்மிக மலர்

பிற பகுதிகள் டீ கடை பெஞ்சு டவுட் தனபாலு இது உங்கள் இடம் பக்கவாத்தியம் சொல்கிறார்கள் கார்ட்டூன்ஸ் ஜோசியம் போட்டோ தமிழக தகவல்கள்

மற்றவை கல்வி மலர் கலை மலர் டெல்லி உஷ் வீடியோ கோயில்கள் புத்தக மதிப்புரை உலக தமிழர் செய்திகள் நகரத்தில் நடந்தவை நிஜக்கதை..

ஆன்மிகம் சிறப்பு பகுதி வாராந்திர பகுதி புத்தகம் காலண்டர் பொக்கிஷம் கூடங்குளம் ஸ்பெஷல் Greetings

தினமலர் முதல் பக்கம் » பொது செய்தி »தமிழ்நாடு

## வெள்ளி இடை மறிப்பை காண பொதுமக்கள் ஆர்வம்

பதிவு செய்த நாள் : ஜூன் 06,2012,23:30 IST

எழுத்தின் அளவு:

கருத்தை பதிவு செய்ய

அருமை பிடிச்சுருக்கு பரவாயில்லையே

Like 0 Share Tweet SHARE



சென்னை: சூரியன் , வெள்ளி கோல் மற்றும் பூமி ஆகியவை ஒரே நேர் கோட்டில் சந்திக்கும் நிகழ்வு நேற்று நடந்தது. இதை பொதுமக்கள் கண்டு ரசித்தனர். அபூர்வமான வெள்ளி இடை மறிப்பு நேற்று நிகழ்ந்தது. நேற்று அதிகாலை, 3.40 மணிக்கு தொடங்கி, காலை 10.21 மணி வரை நடந்தது. இந்த அபூர்வ நிகழ்வை பார்க்க, தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் ஏற்பாடுகளை செய்திருந்தது. சென்னை பிர்லா கோளரங்கத்தில், பார்வையாளர்கள் நிகழ்வை காண வசதியாக சிறிய அளவிலான சூரிய ஒளி வடிகட்டியும், வெல்டிங் நம்பர் 14 கிளாஸ்களும் வழங்கபட்டன. செலஸ்ட்ரான் லென்ஸ் பொருத்தபட்ட தொலை நோக்கிகள் மூலமாக வரிசையில் நின்று கண்டு பார்வையாளர்கள் ரசித்தனர். நிகழ்வை முழுமையாக பார்க்க வசதியாக பெரிய திரைகளும் அமைக்கப்பட்டிருந்தன. அபூர்வ நிகழ்வில், சூரியனின் குறுக்கே கருப்பு புள்ளி போன்ற தோற்றத்துடன் வெள்ளி கோள் கிழக்கிலிருந்து மேற்காக கடந்து சென்றது பார்வையாளர்களை கவர்ந்தது.

இதுகுறித்து பிர்லா கோளரங்க அதிகாரி ஐயம்பெருமாள் கூறும் போது, ""சூரியன் முன்பாக வெள்ளி கோல் நகர்ந்து செல்லும் அபூர்வ நிகழ்வு 2004ம் ஜூன் 8ல் நடந்தது. அதன் பின்னர் தற்போது தான் காண முடிந்தது. அடுத்ததாக 2117 டிசம்பரில் தான் நிகழும்," என்றார்.

நேற்று காலை, 5.40 மணி முதல், மெரீனா கடற்கரை, காந்தி சிலை பின்புறம் சூரியனின் பிம்பத்தை பிடித்து மிகப்பெரிய திரையில், வெள்ளி இடை மறிப்பு நிகழ்வுகளை பார்த்தனர். தமிழ்நாடு அறிவியல் இயக்கம் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தது.

தமிழ்நாடு அறிவியல் இயக்க செயலர் ராமலிங்கம் கூறியதாவது: இந்த தலைமுறையினர் பார்க்கும் கடைசி அபூர்வ நிகழ்வு இது. எதிர்பார்த்ததை விட ஏராளமான பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்த்தனர். நிகழ்வு முடிந்த பிறகும் பலர் வந்து ஏமாற்றமடைந்தனர். மெரீனா கடற்கரையில் மட்டும் நான்கு மணி நேரத்தில் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் நிகழ்வை பார்த்தனர். சென்னை புறநகரில் காட்ராம்பாக்கம், பல்லாவரம், தாம்பரம் ஆகிய இடங்களிலும் நிகழ்வுகளை கண்டுகளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு ராமலிங்கம் தெரிவித்தார். தாம்பரம் மற்றும் சுற்றியுள்ள மக்கள், இதை பார்த்து ரசிக்க, தாம்பரம் வானியல் கழகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பழைய தாம்பரம், குளத்தின் ஒரு பகுதியில், நான்கு தொலைநோக்கிகள் மற்றும் பிரதிபலிப்பு முறையில், 11 பள்ளிகளை சேர்ந்த மாணவர்கள் உட்பட மூன்றாயிரம் பேர், நிகழ்வை பார்த்து ரசித்தனர். குரோம்பேட்டையில், தமிழ்நாடு அறிவியல் இயக்க கிளை ஏற்பாடு செய்திருந்த லென்ஸ் மூலம் வெள்ளி இடைமறிப்பு நிகழ்வை மாணவர்கள் பார்த்தனர். குரோம்பேட்டை, அய்யாசாமி பள்ளியில், காலை 6.30 மணி முதல், 9.30 மணி வரை 120 மாணவர்கள் உட்பட 200 க்கும் மேற்பட்டோர் இந்த அபூர்வ நிகழ்வை பார்த்தனர். தமிழ்நாடு அறிவியல் இயக்க கிளை தலைவர் பலராமன் , இந்த நிகழ்வு குறித்து மாணவ, மாணவியருக்கு விளக்கினார்.

Recommendations facebook

Sign Up Create an account or log in to see what your friends are recommending.

39 பெண்களை மணந்து 160 பேருடன் ஒரே வீட்டில் வசிக்கும் அதிசய மனிதர் | 39 பெண்களை மணந்து 160 பேருடன் ஒர
2,528 people recommend this.

sex tortur | நாள்தோறும் "செக்ஸ் டார்ச்சர்' :கணவனைக் கொல்ல முயன்ற மனைவி கைது Dinamalar
86 people recommend this.

Facebook social plugin

ஆல்பம்






ஆல்பம்


கோல்கட்டாவில் 10ம்


டில்லியில்


எவரெஸ்ட்

புகைப்பட ஆல்பம்


மியான்மரில் பிரதமர் !


சாய் பாபா முதலாம் ஆண்டு மகா ஆராதனை

அதிகம் படித்தவை | அதிகம் விமர்சிக்க பட்டவை | அதிகம் ஈ-மெயில் செய்தவை

- நித்யானந்தாவின் பத்திரிகையாளர் சந்திப்பில் ரகளை: சோகத்தில் ஆதீனம்
- மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்திற்கு அடுத்த சிக்கல்: விசாரணையை சந்திக்க உத்தரவு
- சிதம்பரம் பதவி விலக வேண்டும்: ஜெ.,: பதவி நீக்க வேண்டும்: பா.ஜ.,
- புதுக்கோட்டை: தி.மு.க.,வை கண்டுகொள்ளாத விஜயகாந்த்
- இந்திய கம்யூனிஸ்ட்க்கு கருணாநிதி கேள்வி

இ-பேப்பர்



### மேலும் பொது செய்திகள்:

- சிதம்பரம் பதவி விலக வேண்டும்: ஜெ., கோரிக்கை
- வழக்கு ஆரம்ப கட்டத்திலே உள்ளது சிதம்பரம் வழக்கறிஞர் கருத்து

கடைசி செய்திகள் வீடியோ Become a Fan Share RSS feed

சுற்றுச்சூழல் தின விழா

சத்துணவு பணியாளர் பணியிடம் விண்ணப்பிக்க காலக்கெடு நீட்டிப்பு

தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பு

பக்கத்து வீட்டுக்காரரின் உதட்டை கடித்த குடிமகன்

நவீன எரிவாயு மயானம் விரைவில் திறக்கப்படும்

மாணவர் சேர்க்கை வார விழா

வேளச்சேரி - விஜயநகர் சந்திப்பில்இரண்டு அடுக்கு மேம்பாலம்

கிரிக்கெட் போட்டி

ஆனைமலை கொப்பரை ஏலம்

கோவிலில் கும்பாபிஷேகம்

வால்பாறையில் மலையேறும் பயிற்சி

மாணவர்களுக்கு சப்-கலெக்டர் பாராட்டு










» பொது முதல் பக்கம்

» தினமலர் முதல் பக்கம்

**வாசகர்களுக்கு ஓர் அன் பான வேண்டுகோள்.**

1.செய்திகள் குறித்த கருத்துக்களைப் பதிவு செய்யும்போது, எவருடைய மனதையும் புண்படுத்தாத வகையில், நாகரிகமான முறையில் உங்கள் கருத்துகள் இருக்க வேண்டும் என் று எதிர்பார்க்கிறோம்.

மேலும்

**வாசகர் கருத்து**

## முதல் நபராக கருத்து தெரிவியுங்கள்!

## உங்கள் கருத்தை பதிவு செய்ய :

வாசகர்கள் கருத்து பகுதியில் வெளியாகி இருக்கும் கருத்துக்கள், உரிய முறையில் தணிக்கை செய்யப்பட்டே வெளியிடப்படுகின் றன.

மேலும்

(Press Ctrl+g or click this to toggle between English and Tamil)

Submit

Follow Dinamalar.com

**சினிமா →** கோலிவுட் செய்திகள் | பாலிவுட் செய்திகள் | விமர்சனம் | டிரைலர்கள் | பட காட்சிகள் | சூட்டிங் ஸ்பாட் | சினி விழா | நடிகைகள் | வால் பேப்பர்கள்

**கோயில்கள் →** கோயில் வீடியோ | 108 திவ்ய தேசம் | சிவன் கோயில் | அம்மன் கோயில் | நவக்கிரக கோயில் | தனியார் கோயில் | அறுபடைவீடு | வழிபாடு

**விளையாட்டு →** கிரிக்கெட் | Cricket Live Score | ஹாக்கி | வாலிபால் | துப்பாக்கி சுடுதல் | விளையாட்டு மலர் | ஆசிய விளையாட்டு போட்டி

**உலக தமிழர் செய்திகள் →** தமிழ் சங்கங்கள் | தமிழ் வானொலி | அமெரிக்கா | ஐரோப்பா | ஆப்பிரிக்கா | வளைகுடா | தென் கிழக்கு ஆசியா | ஆஸ்திரேலியா

**பிறமாநில செய்திகள் →** தமிழ் சங்கங்கள் | புதுடில்லி | மும்பை | கோல்கட்டா | பெங்களூரு | பிற மாநிலங்கள்

சினிமா | வர்த்தகம் | விளையாட்டு | புத்தகங்கள் | உலக தமிழர் செய்திகள் | Advertisement Tariff | வாசகர் கடிதம் | International Edition | Font Help? | Dinamalar Publications

Copyright © 2012 Dinamalar - No :1 Tamil News Website. Designed and Hosted by Web Division,Dinamalar. | Contact us

கடைசி செய்திகள் வீடியோ 0 Share Become a Fan Share RSS feed

www.prohithar.com http://www.dinamalar.com/News_Detail.asp?Id=481224